**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No. 40/2021- PW-1**

| | |
|---|---|
| Name | திரு.பிரகாசம் |
| Father Name | திரு.மாரிமுத்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 25.08.2025.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–**

என்னுடைய சின்னக்கண்ணு, பாக்கியம்மாள், சுப்பிரமணி, முனுசாமி, சேட்டு, பொன்னம்மாள் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் ஒரே குடும்பமாக இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் தாத்தா கிருஷ்ணன் 1955–ல் இறந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 6, 9, 10, 11, 12 ஆகிய ஆவணங்கள் சின்னக்கண்ணு மற்றும் பாக்கியம்மாள் அடமானம் ஏற்படுத்தியதற்கான ஆவணங்கள் என்றால் சரிதான். அடமானக்கடனை யார் மீட்டியது என்றால் 1954–ல் ஏற்படுத்திய அடமானக்கடனை 1955–ல் அரசாங்கம் தள்ளுபடி செய்துவிட்டது. மற்ற அடமானக்கடன்களை சுப்பிரமணி என்பவர் மற்ற குடும்பத்தாருடன் சேர்ந்து கூட்டாக மீட்டார். என் அப்பா மாரிமுத்து அடமானக்கடனை மீட்பதற்கு பணம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். எப்போது, எவ்வளவு பணம் என் அப்பா கொடுத்தார் என்று நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். முழுமுழுக்க சுப்பிரமணி என்பவர் தான் அடமானக்கடனை மீட்டினார் என்றாலும், என் குடும்பத்தில் யாரும் அடமானக்கடனை மீட்பதற்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த சொத்துகளில் ஏற்பட்ட கடனை மீட்பதற்கு பணம் கொடுக்காததால் அந்த சொத்துகளிலும் நான் உரிமை கேட்க முடியாது என்றால் சரியல்ல. 1995–ம் ஆண்டிலிருந்து வழக்கு சொத்துகளை நாங்கள் அனுபவம் செய்வதை காண்பிக்க அடங்கல் மற்றும் வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடங்கல் தாக்கல் செய்யவில்லை. வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். வரி ரசீது தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்குரையில் சொல்லியுள்ள சி பட்டியல் சொத்து கனியனூர் கிராமத்திலுள்ளது. அந்த சொத்திலும் அடமானக்கடன் இருந்தது என்றால் சரிதான். வழக்கு சி பட்டியல் சொத்தின் விஸ்தீரணம் 5 ஏக்கர் 14 சென்ட் என நாங்கள் சொல்லியிருப்பது தவறு என்றாலும், சின்னக்கண்ணு அதில் பாதி சொத்தை தான் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் 5 ஏக்கர் 14 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கியுள்ளனர். சின்னக்கண்ணு அடமானக்கடனை மீட்கவில்லை என்றால் சரிதான். வழக்கு பி பட்டியல்

சொத்தை சின்னக்கண்ணு மற்றும் பொன்னம்மாள் கிரையம் வாங்கியிருப்பதாக ஆவணத்தில் இருந்தாலும் பொன்னம்மாளுக்கு அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்பதற்காக அவரது தந்தை சின்னக்கண்ணு பொன்னம்மாள் பெயரையும் சேர்த்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையத்திற்காக பொன்னம்மாள் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தும் அடமானக்கடனுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு இ பட்டில் சொத்தை என் தாத்தா கிருஷ்ணனும், பொன்னம்மாளும் சேர்ந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அவர்கள் அனுபவம் செய்தார்கள் என்பதை காண்பிக்க பட்டா, சாகுபடி அடங்கல், வரி ரசீது அவர்கள் பெயரில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு எப் பட்டியல் சொத்தை என் தாத்தா கிருஷ்ணன் அனுபவம் செய்தார் என்பதை காண்பிக்க பட்டா, சாகுபடி அடங்கல், வரி ரசீது அவர்கள் பெயரில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு இ மற்றும் எப் பட்டியல் சொத்துகள் கிருஷ்ணன் மற்றும் பொன்னம்மாள் ஆகியோர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டிருந்தாலும், அவர்கள் அந்த சொத்துகளை அனுபவம் செய்யவில்லை என்றால் தவறு. வழக்கு சொத்துகள் எதுவும் எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற சொத்துகளை எவ்வாறு என் முன்னோர்கள் அனுபவம் செய்தார்கள் என்பதற்கு வழக்குரையில் விவரங்கள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் ஏற்படும் நல்லது மற்றும் கெட்ட விசேஷங்களுக்கு சுப்பிரமணி, முனுசாமி, சேட்டு ஆகியோர் தான் செலவு செய்து நடத்தி வந்தார்கள் என்றால் தவறு. எங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட கடன்களையும் அவர்கள் தான் செலுத்தி தீர்த்துள்ளார்கள் என்றால் தவறு. என் அப்பா மாரிமுத்து அந்த கடன்களை அடைப்பதற்கு எந்த விதத்திலும் பங்கு பெறவில்லை என்றால் தவறு. எங்கள் குடும்ப விவரங்கள் என் அப்பாவிற்கு நன்கு தெரிந்தும் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்வதை வேண்டுமென்றே தவிர்த்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு எந்த விவரமும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.